# HDFC BANK

நான்கு தசாப்தங்களாக பல்வேறு நிதித் தீர்வுகள் ஊடாக இலங்கை மக்களின் வீட்டு கனவை நிறைவேற்றுவதோடு வர்த்தக சமூகத்தினருக்கு நிதி உதவிகளை அளித்து நாட்டின் நலனுக்காக தம்மை அர்ப்பணித்துள்ள வங்கியுடன் உங்களின் வங்கியியல் தொழிலை உயர் நிலைக்கு கொண்டு செல்வதற்கான அரியதொரு வாய்ப்பு கிட்டியுள்ளது.

HDFC வங்கி, நிதித்துறை சார்ந்த அனுபவம் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான அறிவு கொண்ட உயர் தகுதி வாய்ந்த இணக்க உத்தியோகத்தரை எதிர்பார்க்கின்றது.

## இணக்க உத்தியோகத்தர்

## COMPLIANCE OFFICER

**அடிப்படை பொறுப்புகள்**

- இசைவாக்கம் அடைய வேண்டிய உள்ளக மற்றும் வெளிவாரி சட்டங்கள், ஒழுங்குவிதிகள், கொள்கைகள் மற்றும் நடவடிக்கைமுறைகளுக்கு வங்கி இசைவாக்கம் அடையுமென்பதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான கணக்காய்வு நடவடிக்கைகள் மற்றும் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- ஒழுங்குபடுத்தல் தேவைகள் மற்றும் இணக்க தர நியமங்களுக்கு உட்படுகின்றதா என்பதை ஆராய்வதற்கு தேவையான மீளாய்வு நடவடிக்கைகள் உரிய கால வரம்புகளுக்கு அமைய இடம்பெறுகின்றதென்பதை உறுதிப்படுத்தல்.
- வங்கியின் நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய சகல புதிய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தர நியமங்களை புரிந்து கொள்ளுதல் மற்றும் செயற்படுத்தல்.
- இசைவாக்கத்துடன் தொடர்புடைய பிரச்சனைகள் தொடர்பாக ஏற்புடைய தரப்புகளை இணைத்துக்கொள்வதற்கு மத்தியஸ்தராக செயற்படுதல்.
- சட்ட ரீதியான வழிகாட்டுதல்களை (இலங்கை மத்திய வங்கி, CSE, FIU மற்றும் இதர ஒழுங்குபடுத்தல் நிறுவனங்கள் அறிமுகப்படுத்தியுள்ள) செயற்படுத்தல், பயன்படுத்தல், இற்றைப்படுத்தல் மற்றும் நிறுவனத்துக்குள் அவ்வாறான வழிகாட்டுதல் விதிகள் மீறப்படாத வகையில் பொறுப்புகூறல்
- இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து செயற்பட்டு வங்கியுடன் தொடர்புடைய தரப்புகளை பாதுகாப்பதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

**கல்வித் தகைமைகள்**

- வங்கியியல்/ வர்த்தக நிர்வாகம்/ நிதியியல்/ கணக்கியல்/ பொருளியல்/ சட்ட அல்லது இதர ஏற்புடைய துறையொன்றுடன் தொடர்புடையதாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல்
  அல்லது
  இலங்கை வங்கியியல் நிறுவகம் (AIB)/ இலங்கை பட்டய கணக்காளர்களின் நிறுவகம் (CASL)/ பட்டய சான்று பெற்ற கணக்காளர்களின் நிறுவகம் (ACCA)/ பட்டய முகாமையாளர் கணக்காளர்களின் நிறுவகம் (ACIMA – UK)/ சான்று பெற்ற முகாமையாளர் கணக்காளர்களின் நிறுவகம் (CMA) ஆகிய நிறுவனங்களின் அங்கத்துவத்தை பெற்றிருத்தல்/ சட்டத்தரணி
- வங்கியியல் ஒழுங்குபடுத்தல் மற்றும் இசைவாக்கம் தொடர்பான அனுபவத்தை கொண்டிருத்தல் தனித்துவமான தகுதியாக கருதப்படும்.

**அனுபவம்**

- முகாமையாளர் அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தில் குறைந்தபட்சம் ஐந்து வருடங்களை உள்ளடக்கிய நிதி அல்லது வங்கியியல் துறையில் 10 வருட அனுபவம் மற்றும் இசைவாக்க செயற்பாடு தொடர்பான அனுபவம் மற்றும் பரந்தளவிலான அறிவு
- ஒழுங்குபடுத்தல் இசைவாக்கம், மறு நிதி துய்தாக்கல், கூட்டு நிறுவன நிர்வாகம் மற்றும் ஒழுக்க நெறிகள் தொடர்பான பரந்தளவிலான அறிவு.

**வயதெல்லை** : 50 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிக்கு கவர்ச்சிகரமான ஊதியங்களும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

## விண்ணப்பிக்கும் செயன்முறை

மின்னஞ்சலின் விடய வரிசையில் (Subject) விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 14.02.2024 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் careers@hdfc.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் விபரங்களுடன் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு கோரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவத்தை கொண்டிராத நபர்களுக்கு இந்த பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.

ஏற்புடைய தகைமைகளை பூர்த்தி செய்யாத நபர்களின் விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைத்த விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

நேர்முகப் பரீட்சையின் போது ஏற்புடைய கோப்புகளின் மூலப் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு தவறும் விண்ணப்பதாரிகள் எக் காரணத்தினாலும் மேற்படி பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

எந்தவொரு அழுத்தம் பிரயோகித்தலும் இப் பதவிக்கான தகைமை இழப்பாக கருதப்படும்.

ஆட்சேர்ப்புகளை பிற்போடுவதற்கான அல்லது ரத்துச் செய்வதற்கான உரிமை HDFC வங்கிக்கு உண்டு. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆட்சேர்ப்பு செயன்முறையின் அடுத்த கட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள்.


**உதவிப் பொது முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்**

HDFC **வங்கி,**

**த.பெ. இல** 2085,

**சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,**

**கொழும்பு** 02

**தொலைபேசி இல** - 0112 356800 - **இணைய தள முகவரி** : www.hdfc.lk